**ஆற்காடு நகராட்சி**

**மன்றக் கூட்டப்பொருள்**

**31.07.2020ம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறவுள்ள நகரமன்ற சதாரணக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்**

**பொருள் எண்.1)** இந்நகராட்சி ஆணையாளர் (பொ) அவர்களின் ஜீன்–2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கு வைக்கப்படுகிறது.
அ.கு. 1) மன்றம் பதிவுசெய்யலாம்
ந.க.எண்.0665/2018/சி1

**தீர்மானம் எண். 129 – பதிவு செய்யப்பட்டது**

**பொருள் எண்.2)** இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜீன்–2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கு வைக்கப்படுகிறது.
அ.கு. 1) மன்றம் பதிவுசெய்யலாம்.

**தீர்மானம் எண். 130 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3)** இந்நகராட்சிக்கு சொந்தமான வேப்பூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 250 KVA டிரன்ஸ்பார்மர் காயில் பழுதடைந்துள்ளதை சரி செய்து புதிதாக காயில் கட்டி சர்வீஸ் செய்தல் பணியினை திருவாளர் SRI ESHWAR TRANSFORMERS நிறுவனத்தின் மூலம் ரூ.54,917/–க்கான மதிப்பீட்டில் நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வையிக்கும் பதிற்கும் வைக்கப்படுகிறது.
அ.கு. 1) மன்றம் பதிவுசெய்யலாம்.

**தீர்மானம் எண். 131 – பதிவு செய்யப்பட்டது**

**பொருள் எண். 4)** ஆற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களில் தேசிய நெடுஞ்சாலை துறையின் மூலமாக ஆக்கிரமிப்பு நடைபெற்றது. அந்த ஆக்கிரமிப்பு அகற்றம் செய்வதற்க்கு நகராட்சிக்கு எதிராக திரு.A.K. நடராஜன் இராணிப்பேட்டை நீதிமன்றத்தில் வழக்கு எண். O.S.66/2020 வழக்கு தொடர நகராட்சி வழக்கறிஞர் திரு.K.ஜெயசங்கர் அவர்கள் வக்காலத்து நாமா இராணிப்பேட்டை நீதிமன்றத்தில் நகராட்சிக்கு சார்பாக தாக்கல் செய்துள்ளார் அதற்கான வழக்கு கட்டணமாக ரூ.5000/– தொகையினை வழஙக 26.06.2020–ல் பில் தொகை வழங்கியுள்ளார் தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு –
அவசர அவசியம் கருதி அனுமதி வழஙகலாம்
(ந.க.எண்.589/2020/எப்1)

**தீர்மானம் எண். 132 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5)** ஆற்காடு நகராட்சி வழக்குகள் வார்டு D பிளாக் – 23, நகர அளவு எண்.2ல் உள்ள ஆக்கிரமிப்பினை அகற்ற அனுப்பிய அறிவிற்ப்புக்கு திரு.T.நந்தகுமார், த/பெ. திருவேங்கடம் என்பவர் இந்நகராட்சிக்கு எதிராக ஆணையாளர் மீது இராணிப்பேட்டை நீதிமன்றத்தில் வழக்கு I.A எண்.1/2020 மற்றும் O.S.எண். 33/2020 வழக்கு தொடர்ந்துள்ளார் நகராட்சி சார்பாக நகராட்சி வழக்கறிஞர் திரு.K.ஜெயசங்கர் அவர்கள் இராணிப்பேட்டை நீதிமன்றத்தில் வக்காலத்து நாமா தாக்கல் செய்துள்ளார் அதற்கான வழக்கு கட்டணமாக ரூ.5000/– தொகையினை வழங்க 26.06.2020–ல் பில் தொகை வழங்கியுள்ளார் தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு –
அவசர அவசியம் கருதி அனுமதி வழுங்கலாம்
(ந.க.எண்.158/2020/எப்1)

**தீர்மானம் எண். 133 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6)** இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் Covid-19 கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் இருப்பதற்கு பொது மக்களின் நலன் கருதி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நோய் கட்டுப்பாட்டு பகுதிகளில் தடுப்பு வேலி அமைத்தல் பணியினை திருவாளர் M/s. K. RAJARAM & Co ஒப்பந்ததாரர் மூலம் ரூ.66,000/–க்கான மதிப்பீட்டில் நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வையிக்கும் பதிற்கும் வைக்கப்படுகிறது.
அ.கு. 1) மன்றம் பதிவுசெய்யலாம்.

**தீர்மானம் எண். 134 – பதிவு செய்யப்பட்டது**

**பொருள் எண். 7)** இந்நகராட்சியின் 2018–19 ம் ஆண்டின் தணிக்கை அறிக்கையின்படி 2018–19 ஆண்டிற்கு செலுத்த வேண்டிய தணிக்கை கட்டணம் உரிய அரசு தலைப்பில் செலுத்துமாறு உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை வேலூர் அவர்களின் தணிக்கை அறிக்கை பத்தி எண். 72ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே தணிக்கை கட்டணம் ரூ.98,427/– தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.
அ.கு.
1) 2018–19 ம் ஆண்டின் தணிக்கை கட்டணம் ரூ.98,427/– செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.
2) ரூ.98,427/– தொகையினை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க. எண்.124/2020/அ5

**தீர்மானம் எண். 135 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8)** இந்நகராட்சியில் 2019–2020 ம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ. 7.75 இலட்சம் மதிப்பீட்டில் ஆற்காடு நகராட்சி ஆரணி சாலை, கலவை சாலை மற்றும் ஜீவானந்தம் சாலை சந்திப்பில் உயர் கோபுர மின் விளக்கு அமைத்தல் பணிக்கு 10.07.2020ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதின்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் கீழ்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | E. பலராமன், ராகவேந்திரா எலக்ட்ரிக்கல்ஸ், நெமிலி | **0.05 %** மதிப்பீட்டினைவிட குறைவு |
| 2 | C. சங்கர், நெமிலி | **0.15 %** மதிப்பீட்டினைவிட அதிகம் |

அ.கு.– மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு E. பலராமன், ராகவேந்திரா எலக்ட்ரிக்கல்ஸ், நெமிலி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட **0.05 %** சதவீதம் குறைவாக உள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 136 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9)** இந்நகராட்சிக்கு உட்பட்ட தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் மின் பொருட்களின் இருப்பு மிக குறைவான அளவில் இருப்பில் உள்ளதால் தற்போது தேவைப்படும் உதிரி மின் பொருட்களான (Tube, Choke, Stater, Light) மற்றும் இதர மின் பொருட்களை Vellore District Consumers Co-op Wholesales Stores Ltd, Vellore அவர்களிடமிருந்து கொள்முதல் செய்வதற்கான செலவீனம் ரூ.2,68,976/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று தெருவிளக்கு பராமரிப்பு பொருட்களை கற்பகம் கூட்டுறவு மொத்த அங்காடி வேலூர் அவர்களிடம் கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 137 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10)** இந்நகராட்சிக்கு சொந்தமான வேப்பூர் தலைமை நீரேற்று நிலையத்திலுள்ள 75 எச்பி மோட்டர் பழுதினைசரிசெய்திட உள்ளூர் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளி ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விகிதம் ரூ. |
|---|---|---|
| 1) | Sri Balaji Industries Vellore | 29,900/– |
| 2) | T. Ganesh & Engg & Electricial | 30,900/– |
| 3) | Balamurugan Engineering works Ranipet | 30,500/– |

அ.கு :-
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ பாலாஜி இண்டஸ்டீரிஸ் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 138 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11)** ஆற்காடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பயன்பாட்டில் இருந்து தற்போது பயனற்று முறையில் இருக்கும் பொருட்களை உடனடியாக ஏலம் விட நடவடிக்கை எடுக்குமாறு நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் 24.07.2020ம் நாளில் காண்ணொலி கண்காட்சியில் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி, இந்நகராட்சி உள்ள டம்பர் பிளேசர் பின் 68 எண்ணிக்கை மற்றும் கை வண்டி 80 எண்ணிக்கையில் பயனற்று உள்ளதால் இப்பொருட்களின் தற்போதுலுள்ள வணிக மதிப்பிட்டினை பொறியியல் பிரிவில் பெற்று ஏல விதிகளின் படி ஏலம் விட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் பொது சுகாதாரப் பிரிவில் பயன்ற்றுள்ள டம்பர் பிளேசர் பின் 68 எண்ணிக்கை மற்றும் கை வண்டி 80 எண்ணிக்கையினை தற்போது வணி மதிப்பிட்டினை பொறியியல் பிரிவில் பெற்று ஏல விதிகளின் படி ஏலம் விட மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்றமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 1095/2020/எச்1

**தீர்மானம் எண். 139 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12)** இந்நகராட்சியில் குடிநீர் விநியோகம் பிரதான நீர் ஆதாரமாகிய வேப்பூர் மற்றும் பாலாற்றுப் படுகையில் காசிவிஸ்வநாதர் கோயில் அருகாமையில் அமைந்துள்ள கிணறு மற்றும் பெருமாள் கோயில் அருகாமையில் உள்ள நீர் உறிஞ்சு கிணறுகளில் இருந்து பெறப்படும் குடிநீரை கொண்டு 8 நீர்தேக்கத்தொட்டியில் நீரேற்றம் செய்யப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இவைகளை பராமரிக்க குடிநீர் பணியாளர் பொறியியல் பிரிவில் குழாய் பொருத்துனர்–1, காவலர்–2, மதகு திறப்பாளர்–1 ஆகிய பணியிடங்களுக்கான பணியாளர்கள் தற்போது உள்ளனர். பிரதான நீரேற்று நிலையத்தில் மின்வலியர் பணியிடமும் காலியாக உள்ளது. மேலும் தெருவிளக்கு 2502 எண்ணிக்கையில் உள்ளதை 1 மின் கம்பியாளர் மற்றும் 1 மின்கம்பி உதவியாளர் கொண்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே 1 மின்கம்பியாளரை வேப்பூர் நீரேற்று நிலையத்திற்கு நிரந்தரமாக மின்வலியர் பணியை பார்க்க பணிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் 1 பணி ஆய்வர் பணியிடமும் காலியாக உள்ளது. மேற்கூறிய பணிகளுக்கு அவசியம் தேவையான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் சுகாதாரப்பிரிவில் ஒப்பந்த அடிப்படையில் (Outsourcing) முறையில் பணிபுரிந்து வரும் பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுசுகாதார பிரிவு Outsourcing பணியாளர்கள் பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்படுவதால் தூய்மை பணிகள் மேற்கொள்வதற்கு ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டு தினசரி திடக்கழிவுகளை கையாள்வது

சிரமமாக உள்ளது என்றும் மேற்படி பணியாளர்களை திரும்ப வழங்கும்படியும் சுகாதார ஆய்வாளர்மற்றும் சுகாதார அலுவலர் பலமுறை கோரிக்கை விடுத்து வருவதாலும், மேலும் கடந்த ஒருமாதகாலத்திற்கு மேலாக குடிநீர்விநியோகம் ஏற்கனவே இருந்த ஒருநாள்விட்டு ஒருநாள் வழங்கப்பட்டு வந்ததை தவிர்த்து தற்போது தினசரி வழங்கப்பட்டு வருகிறது. இதனால் தேவைக்கு குறைவாகவே உள்ள பணியாளர்களை கொண்டு பராமரிப்பு செய்வது பணிச்சுமையாகவும், பணியில் தொய்வும் ஏற்படுகிறது. மேலும் சீரான முறையில் குடிநீர் விநியோகம் தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் பொறியியல் பிரிவில் கட்டுமான பணிகளை செவ்வனே மேற்கொள்ள போதுமான தகுந்த திறமையான பணியாளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி 2020–21 விகிதத்தில் அமர்த்தி செயல்படுத்த வேண்டிய அத்தியாவசிய நிலை உள்ளது. மேலும் நகராட்சி மூலம் நேரடியாக தினக்கூலி பணியாளர்களை அமர்த்தி பணிகளை செயல்படுத்திட வாய்ப்பில்லாமல் உள்ளது. மேலும் இந்நிலையில் ஆற்காடு நகராட்சி பகுதியில் ஆண்கள் சுயஉதவிக்குழு நடத்திவரும் சபரி கிரிவாசன் ஆண்கள் சுயஉதவிக்குழு தங்கள் குழுவில் உள்ள உறுப்பினர்களின் தகுதிக்கேற்ற பணியை வழங்க வேண்டி மனு செய்துள்ளதை ஏற்று 11 பணியாளர்களை அவரவர் தகுதிக்கேற்ற பணியில் ஈடுபடுத்திக்கொள்ளவும், ஆகஸ்ட் 2020 ,செப்டம்பர் 2020 மற்றும் அக்டோபர் 2020 அதற்காகும் 3 மாத காலத்திற்கான தோராய உத்தேச செலவினம் ரூ.3,53,520/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. **1)** பொறியியல் பிரிவில் மேற்கொள்ளப்படும் அத்தியாவசிய பணிகளுக்கு பணிகளின் அவசியம் தேவை என்பதால் சிறப்பினமாக கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட பணியாளர்களுக்கான செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 140 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13)** ஆற்காடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் டெங்கு கொசு ஒழிப்பு பணியில் நான்கு மகளீர் குழு 52 பணியாளர்களை கொண்டு தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதில் 30.06.2020ம் நாளுடன் முடிவடைவதால் இப்பணியினை மேலும் ஆறு மாதங்களுக்கு 01.07.2020 முதல் 30.12.2020 வரையிலான நாட்களுக்கு அதே தின கூலி ரூ.277/–யின் அடிப்படையில் நீடித்து வழங்க தோராய செலவினத் தொகை ரூ.27.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் டெங்கு கொசு ஒழிப்பு பணி தொடர் நடவடிக்கையாக மேற்கொண்டு வருவதால் அதே தின கூலியின் அடிப்படையில் மேலும் ஆறு மாதங்களுக்கு நீடித்து 52 மகளீர் குழு பணியாளர்களுக்கு வழங்க மன்றப்பொருள் எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
3. மேற்படி செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

   ந.க.எண். 2600/2015/எச்1

**தீர்மானம் எண். 141 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14)** இந்நகராட்சிக்கு சொந்தமான காலியாக உள்ள குத்தகை கடைகள் நகராட்சிக்கு செலுத்தவேண்டிய குத்தகை தொகைகள் செலுத்தாதால் பூட்டிசீல்வைக்கப்பட்டது மற்றும் நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்ட கடைகள் கீழ்கண்டவாறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது

| **வ.எ** | **வரிவிதிப்பு எண்** | **குத்தகை தாரர் பெயர்** | **குத்தகை கடை விவரம்** | **செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை** | **வருவாய் ஆய்வாளரால் பூட்டி சீல் வைக்கப்பட்டது / ஒப்படைக்கப்பட்டது** | **கடையின் சதுர அடி** |
|---|---|---|---|---|---|---|
| 1 | 025/217 | சம்சுதின் | வேலூர் மெயின்ரோடு தரைதள கடை எண் . 2 | 239448/– 2018–19 டிசம்பர் முதல் 2019–20 மார்ச்வரை | பூட்டி சீல் வைக்கப்பட்ட நாள் 10.03.2020 | 100 ச.அடி |
| 2 | 025/ BD01/00004 | பி.மேகநாதன் | வேலூர் மெயின்ரோடு மேல் மாடி கடை எண் .2 | நிலுவை இல்லை குத்தகை முன் பணம் வழங்கப்பட்டது நகரமன்ற தீர்மான எண் 206 நாள் 28.06.2019) | ஒப்படைக்கப்பட்ட நாள் 30.03.2019 | 100 ச.அடி |
| 3 | 025/80 | எ.ஆர். திவாகரன் | மாங்காய் மண்டி கிழக்கு பக்க குடோன் | 682180/– 2018–2019 அக்டோபர் முதல் 2019–2020 மார்ச் வரை | பூட்டி சீல் வைக்கப்பட்ட நாள். 12.03.2020 | 1656 ச.அடி |

மேற்கண்ட குத்தகை கடை வ.எண். 1 மற்றும் 3ல் உள்ள கடைகளுக்கு நிலுவைத் தொகையினை வசூல் செய்ய நீதிமன்றம் மூலம் வழக்கு தொடரவும் அதற்காகும் செலவினத்திற்கு மன்றம் அனுமதி வழங்கவும், 3 குத்தகை கடைகளை பொதுஏலம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும், ஏல விளம்பர அறிக்கையினை ஒரு தினசரி தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) குத்தகை நிலுவைத் தொகை செலுத்தாத குத்தகைதாரர்கள் முன் வைப்புத்தொகையினை பறிமுதல் செய்து நிலுவைத்தொகைக்கு ஈடுசெய்ய மன்றம் அனுமதிக்கலாம்

3) அவ்வாறு நிலுவை /குத்தகை தொகை செலுத்தாத குத்தகைதாரர் மீது நீதிமன்றம் மூலம் வழக்கு தொடரவும் அற்காகும் வழக்கு செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

4) மன்றப்பொருள் வ.எண்.1 முதல் 3வரை உள்ள இனங்கள் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

5) விளம்பர செலவினம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண் 723/20200அ1)

**தீர்மானம் எண். 142 – அனுமதிக்கப்பட்டது.**

நாள் : 31.07.2020

(ஒப்பம்) **திரு.சு.முரளிதரன்,**
தனி அலுவலர், ஆற்காடு நகராட்சி

**// உண்மை நகல் //**

**ஆணையாளர்,**
**ஆற்காடு நகராட்சி.**